செ.வெ.எண்.470/2021 நாள்.20.10.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனை அங்காடியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

**தீபாவளி 2021 பண்டிகையையொட்டி திருப்பத்தூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் 30% சிறப்புத் தள்ளுபடியுடன் விற்பனை செய்யப்படுகிறது.**

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனை அங்காடியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

கோ-ஆப்டெக்ஸ் என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் 1935-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு தொடர்ந்து 86 ஆண்டுகளாக வாடிக்கையாளர்களுக்கு சேவை புரிந்து வருகிறது. மேலும் வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனை மற்றும் அவர்களின் தேவைகளையறிந்து கைத்தறி இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் புத்தம் புதிய வடிவமைப்புகளில் உற்பத்தி செய்து இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும் அளித்து வருகிறது.

இந்த பாரம்பரியம் மிக்க நெசவுத் தொழிலில் நவீன உக்திகளை கையாண்டு அரிய வேலைப்பாடுகளுடன் எழில் கொஞ்சும் வண்ணக் கலவைகளில் பட்டு மற்றும் கைத்தறி இரக சேலைகள் புதிய வடிவமைப்பிலும் ஆர்கானிக் மற்றும் கலங்காரி காட்டன் புடவைகள் மிக குறைந்த விலையில் நேர்த்தியான வண்ணங்களிலும் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் பருத்தி இரக சேலைகள், லுங்கிகள், போர்வைகள், திரைச்சீலைகள், துண்டுகள், கைக்குட்டைகள், வேட்டிகள், ரெடிமேட் சட்டைகள், குர்தீஸ் மற்றும் எண்ணற்ற இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவைப் பெற்று வருகிறது. இவ்வாண்டு புதிய வரவுகளாக சில்க் லினன் சேலைகள். டிசைனர் காட்டன் சேலைகள், டிசைனர் கலெக்ஷன் போர்வைகள் சாம்பிரே போர்வைகள், பாலி விஸ்கோஸ் சூட்டிங் ஆகியன விற்பனைக்கு உள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் வேலூர் மண்டலத்தின் கீழ் திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 15 விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. கடந்த ஆண்டு தீபாவளிக்கு ரூ.7.67 கோடி விற்பனை செய்யப்பட்டது.

தற்போது தீபாவளி 2021 பண்டிகை விற்பனை இலக்காக ரூ.20 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூர் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் கடந்த ஆண்டு ரூ.10.40 லட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்கு ரூ.20 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் திருநாட்டின் மிக முக்கிய பண்டிகையான தீபாவளி 2021 விற்பனை அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் 30% சிறப்புத் தள்ளுபடியுடன் கோலாகலமாக துவங்குகிறது. தூயப்பட்டு மற்றும் அசல் ஜரிகைகளால் தயாரிக்கப்பட்ட திருமண பட்டுப்புடவைகள் ரூ.5,000 முதல் ரூ.40,000 வரையில் பல வண்ணங்களில் சங்க விலைக்கே வழங்கப்படுகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் ஏற்றுமதி இரகங்களான ஏப்ரான், குல்ட் மெத்தைகள், கையுறைகள், டேபுள்மேட், ஸ்கீரின் துணிகள் தலையணை உறையுடன் கூடிய படுக்கை விரிப்புகள் வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. கனவு நனவு திட்டத்தின் கீழ் மாதந்திர தவணைத் திட்டத்தில் 50% கூடுதல் பலன் உள்ளதால் வாடிக்கையாளர்கள் தொடர்ந்து கனவு நனவு திட்டத்தில் உறுப்பினராக இருந்து வருகின்றனர். கோ-ஆப்டெக்ஸப் நிறுவனம் தற்போது ஆன்லைன் மூலம் உலக அளவில் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து சாதனை படைத்து வருகிறது. மேலும் 30% சிறப்பு தள்ளுபடியுடன் அரசு ஊழியர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் வட்டியில்லா கடன் விற்பனை வசதியை இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்குகிறது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசு கைத்தறி இரகங்களுக்கு 30% சிறப்பு தள்ளுபடி வழங்குகிறது. மேலும் வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை நிலையம் செயல்படும். இந்த அரசு தள்ளுபடி வருகிற 31.01.2022 வரை மட்டுமே அனைவரும் கைத்தறி துணிகளை வாங்கி நெசவாளர்களுக்கு உதவிட வேண்டும் என கோ-ஆப்டெக்ஸின் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.உமாமகோஸ்வரி, கோ-ஆப்டெக்ஸ் கிளை மேலாளர் திரு.சந்துரு, கோ-ஆப்டெக்ஸ் பணியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**